பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

05 02 2025 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. அரசு திட்டங்களின் பலன் 100 சதவீத அளவுக்கு மக்களை சென்றடையும் வகையில் மத்திய அரசு பணியாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. தமிழக ரயில் திட்டங்களுக்கு மத்திய பட்ஜெட்டில் ஆறாயிரத்து 626 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதன் மூலம் மாநிலத்தின் ரயில்வே கட்டமைப்பு உத்வேகம் பெறும் என மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.
3. தமிழக அரசு பணியாளர்களுக்கான ஓய்வூதிய முறை குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை அளிக்க புதிய குழு ஒன்றை மாநில அரசு அமைத்துள்ளது.
4. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.
5. உத்தராகண்ட்டில் நடைபெற்று வரும் தேசிய விளையாட்டுப் போட்டியின் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் தமிழகத்தின் சதிஷ்குமார் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

அரசு திட்டங்களின் பலன் 100 சதவீத அளவுக்கு மக்களை சென்றடையும் வகையில் மத்திய அரசு பணியாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், மக்களுக்கு மன நிறைவு அளிக்கும் வகையில் அரசு செயல்படுவது அவசியம் என்றார்.

மூலதன செலவுகளுக்கான அரசின் பட்ஜெட் ஒதுக்கீடு தமது ஆட்சிக் காலத்தில் 11 லட்சத்து 21 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

அரசின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தியதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் மிச்சமாகி இருப்பதுடன், சரியான பயனாளிகளை கண்டறிந்ததன் மூலமும் மூன்று லட்சம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த ஏதுவாக பள்ளிக் கூடங்களில் இதுவரை பத்தாயிரம் ஆய்வகங்கள் உருவாக்கப் பட்டிருப்பதுடன், வரும் ஆண்டுகளில் மேலும் 50 ஆயிரம் ஆய்வகங்கள் அமைக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் செயற்கை நுண்ணறிவுத் துறையை மேம்படுத்த அரசு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு விளைப் பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டிருப்பதோடு, அவர்களுக்கு வருவாய் ஆதரவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

பிரதமரின் பதிலுரைக்குப் பின் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

**[]<<<>>>[]**

நாட்டில் 26 தொடக்க வேளாண் கடன் சங்கங்களில் பெட்ரோல் டீசல் சில்லரை விற்பனை மேற்கொள்ளப்பட இருப்பதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், இந்த கூட்டுறவு சங்கங்களில் பொது சேவை மையங்களை தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நபார்டு வங்கி மற்றும் பொது சேவை மைய மின்னணு ஆளுகை சேவை நிறுவனம் இடையே கையெழுத்தாகி இருப்பதாகவும் கூறினார்.

நாட்டில் தற்போது 33 மாநிலங்களில் உள்ள 42 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொடக்க வேளாண் கடன் சங்கங்களில் பொது சேவை மையம் செயல்பட்டு வருவதாகவும் திரு அமித்ஷா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழக ரயில் திட்டங்களுக்கு மத்திய பட்ஜெட்டில் ஆறாயிரத்து 626 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதன் மூலம் மாநிலத்தில் ரயில்வே கட்டமைப்பு வசதிகள் உத்வேகம் பெறும் என தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இதுவரை இல்லாத வகையில் தமிழகத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ததற்காக பிரதமர் திரு நரேந்திரமோடி மற்றும் நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தி விரைவான வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவை  உருவாக்குவது என்ற பிரதமர் திரு நரேந்திரமோடியின் தொலைநோக்கு பார்வையை நிறைவேற்றுவதாக பட்ஜெட் உள்ளது என்றும் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

சமுதாய வளர்ச்சியில் தேசிய மாணவர்படையினர் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தில்லியில் நடைபெற்ற குடியரசுதின முகாமையொட்டி நடத்தப்பட்ட திறன் போட்டிகளில் வெற்றிபெற்ற தமிழகத்தைச் சேர்ந்த என் சி சி மாணவ மாணவிகளுக்கு சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் ஊக்கத்தொகை மற்றும் முதலமைச்சரின் பதாகையை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், தமிழக மாணவர்கள் அகில இந்திய அளவில் ஒட்டுமொத்தமாக மூன்றாவது இடத்தை பிடித்திருப்பது பெருமை அளிப்பதாகக் கூறினார்.

என் சி சி மாணவர்கள் தன்னலம் பாராமல் ஆற்றும் சேவைகள் என்றைக்கும் போற்றத்தக்கவை என்று அவர் குறிப்பிட்டார்.

சென்னை மற்றும் திருநெல்வேலியில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளின்போது வருவாய்த்துறை மற்றும் காவல்துறையினருடன் இணைந்து தேசிய மாணவர் படையினர் ஆற்றிய பணிகள் பாராட்டத்தக்கவை என்றும் அவர் கூறினார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் என் சி சி நிரந்தர முகாமில் ஒரு கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வரும் உள்கட்டமைப்பு வசதிகள் விரைவில் திறந்து வைக்கப்படுவதுடன், திருச்சி மாவட்டம் ஓலையூரில் உள்ள பயிற்சி முகாம் ஒரு கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட உள்ளதாகவும் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ளது.

வாக்குப்பதிவு காலை ஏழு மணிக்கு தொடங்கி மாலை ஆறு மணி வரை நடைபெறுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - மூர்த்தி ) --59--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழக அரசு பணியாளர்களுக்கான ஒய்வூதிய முறை குறித்து அய்வு செய்து அரசுக்கு பரிந்துரை அளிக்க ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு ககன்தீப் சிங் பேடி தலைமையில் புதிய குழு ஒன்றை தமிழக அரசு அமைத்துள்ளது.

சென்னை பொருளாதார பள்ளியின் முன்னாள் இயக்குநர் திரு கே ஆர் சண்முகம், இக்குழுவின் உறுப்பினராகவும், மாநில அரசின் நிதித்துறை துணைச் செயலாளர் திரு பிரத்திக் தாயள் குழுவின் உறுப்பினர் செயலராக இருப்பார் என்றும் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த குழு பழைய ஓய்வூதிய திட்டம், பங்களிப்பு ஓய்வூதிய திட்டம், ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் ஆகிய மூன்று திட்டங்களையும் விரிவாக ஆய்வு செய்து அறிக்கை மற்றும் பரிந்துரைகளை ஒன்பது மாதங்களில் சமர்ப்பிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

உலக நாடுகளுக்கான நிதி உதவி திட்டத்தை அமெரிக்கா நிறுத்தி வைத்திருப்பது பல்வேறு நாடுகளிலும் உயிர்க்காக்கும் நடவடிக்கைகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஐ நா கவலை தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஸ்வீடனில் கல்வி நிறுவனம் ஒன்றில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில் பத்து பேர் உயிரிழந்தனர்.

[]<<<>>>[]

சர்வதேச நீதி மற்றும் அமைதி மாநாடு துபாயில் வரும் ஏப்ரல் மாதம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

லிபியாவின் பெங்காசி நகரில் பல வாரங்களாக சிக்கித் தவித்த 18 இந்தியர்கள் அங்குள்ள இந்திய தூதரக உதவியுடன் இன்று நாடு திரும்பவுள்ளனர்.

[]<<<>>>[]

ஹரியானாவில் உள்ளாட்சி தேர்தல்கள் அடுத்த மாதம் இரண்டாம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

பிரதமரின் கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் ஜம்மு-கஷ்மீரில் கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் ஐயாயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கான சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

[]<<<>>>[]

திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பேட்டைக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் பயணம் மேற்கொள்வதையடுத்து அப்பகுதியில் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

திண்டுக்கல் மாவட்ட புதிய ஆட்சியராக திரு சரவணன் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

[]<<<>>>[]

தூத்துக்குடி அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது பழுது காரணமாக படகு நீரில் மூழ்கியதை அடுத்து கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த ஆறு மீனவர்களை, மற்றொரு விசைப்படகு மீனவர்கள் மீட்டு பத்திரமாக கரைக்கு அழைத்து வந்தனர்.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட அங்கம்பாக்கம் மற்றும் தம்மனூர் ஊராட்சிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

கன்னியாகுமரி அருகே சின்னமுட்டம் பகுதியைச் சேர்ந்த சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்தவருக்கு 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நாகர்கோவில் போக்சோ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

[]<<<>>>[]

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் திருப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வரும் நிலையில், ராஜகோபுரத்தில் அமையவுள்ள முருகனின் வேல் விரைவில் பொருத்தப்படும் என்று கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

உத்தராகண்ட்டில் நடைபெற்று வரும் தேசிய விளையாட்டுச் போட்டியின் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் தமிழகத்தின் சதிஷ்குமார் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

இப்போட்டியின் மகளிர் பிரிவில் ஹரியானாவின் அன்மோல் கர்ப் தங்கப்பதக்கம் வென்றார்.

பதக்கப்பட்டியலில் 28 தங்கம் உள்ளிட்ட 53 பதக்கங்களுடன் கர்நாடகா முதலிடத்தில் உள்ளது.

சர்வீசஸ் அணி 21 தங்கம் உள்ளிட்ட 40 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், 16 தங்கம் உள்ளிட்ட 76 பதக்கங்களுடன் மகாராஷ்டிரா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

தமிழக அணி 11 தங்கம், 16 வெள்ளி, 16 வெண்கலம் என 43 பதக்கங்களுடன் நான்காவது இடத்தில் உள்ளது.

**[]<<<>>>[]**

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இந்திய அணியில் வருண் சக்கரவர்த்தி சேர்க்கப்பட்டுள்ளதாக பி சி சி ஐ தெரிவித்துள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரு நாடுகளுக்கும் இடையேயான முதல் போட்டி நாக்பூரில் நாளை நடைபெறவுள்ளது.